தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## உருளைக் கிழங்கு, பீட்ரூட் மற்றும் கேரட்டிற்கு அறுவடையின் போது நல்ல விலை கிடைக்கும்

உலகளவில் காய்கறி உற்பத்தியில் இந்தியா இரண்டாமிடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் காய்கறி பயிர்களான உருளைக்கிழங்கு, பீட்ரூட் மற்றும் கேரட் பயிரிடப்படுகிறது. வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகமானது உருளைக் கிழங்கு, பீட்ரூட் மற்றும் கேரட் ஆகிய பயிர்களுக்கு கீழ்கண்ட விலை முன்னறிவிப்புகளைச் செய்துள்ளது.

**உருளைக் கிழங்கு**

தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் கணக்கீட்டின்படி, 2012-13ல் இந்தியாவில் உருளைக்கிழங்கு 20.23 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 463.39 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் பீகார் ஆகிய மூன்று மாநிலங்கள் மட்டுமே இந்தியாவின் மொத்த சாகுபடி பரப்பில் 85 சதவீதமும் மற்றும் உற்பத்தியில் 89 சதவீதமும் பங்களிக்கின்றன. 2012-13ல் இந்தியா 11.14 இலட்சம் டன்கள் உருளைக் கிழங்கு ஏற்றுமதி செய்தது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகமாகும். 2012-13ல் தமிழ்நாட்டில் 5350 எக்டரில் பயிரிடப்பட்டு 1,15,630 டன்கள் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களின் மலைப் பிரதேசப் பகுதிகளில் உருளைக் கிழங்கு பயிரிடப்படுகிறது. நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கு சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் வேலூர் போன்ற இடங்களுக்கும், வெளிமாநில சந்தைகளிலும் விற்பனை செய்யப்படுகிறது.

இம்மையம் மேட்டுப்பாளையத்தில் செயல்பட்டு வரும் நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த 23 ஆண்டுகளாக நிலவிய உருளைக்கிழங்கு விலையை ஆய்வு செய்தது.

மேலும் வர்த்தகர்களிடமும் ஆய்வு செய்தது, ஆய்வு முடிவுகளின்படி விவசாயிகளுக்கு நல்ல தரமான உருளைக் கிழங்கிற்கு நவம்பர், டிசம்பர் மாதங்களில் கிலோவிற்கு ரூ.25 முதல் ரூ.27 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

**பீட்ரூட்**

இந்தியாவில் ஹரியானா, உத்திரப்பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா ஆகியன பீட்ரூட் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் 2011-12ம் ஆண்டில் பீட்ரூட் 1,116 எக்டரில் பயிரிடப்பட்டது. திருப்பூர் (33.42 சதவீதம்), தேனி (17.47 சதவீதம்), நீலகிரி (14.60 சதவீதம்), திண்டுக்கல் (13.98 சதவீதம்), கோவை (11.56 சதவீதம்), கிருஷ்ணகிரி (6.45 சதவீதம்) மற்றும் ஈரோடு (1.16 சதவீதம்) ஆகியன பீட்ரூட் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். பொதுவாக பீட்ரூட் தமிழகத்தின் மேட்டுப்பாளையம் காய்கறி சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. தற்பொழுது 75 கிலோ பீட்ரூட் ரூபாய் 1800 முதல் ரூ. 2600 வரை விற்பனை செய்யப்படுகிறது. நீலகிரி, தாளவாடி மற்றும் பல்லடத்தை சார்ந்த பீட்ரூட் விவசாயிகள் இச்சந்தையில் விற்பனை செய்கின்றனர். கேரளா, திருப்பூர், மதுரை பெங்களூர், மைசூர் மற்றும் சென்னையை சார்ந்த வர்த்தகர்கள் இச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்கின்றனர். வர்த்தகர்கள் பொதுவாக நிறம் மற்றும் அளவை கொண்டு தேர்வு செய்கின்றனர். விலை பொதுவாக தரம் மற்றும் வரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

இம்மையம் கடந்த 10 ஆண்டுகளாக மேட்டுப்பாளையம் மொத்த விற்பனை சந்தையில் நிலவிய விலைகள் மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வின் முடிவில் அறுவடையின் போது அதாவது நவம்பர் மற்றும் டிசம்பர் 2014ல் பீட்ரூட் விலை கிலோவிற்கு ரூ.20 முதல் ரூ.25 வரை நிலவும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

**கேரட்**

இந்தியாவில் 2012-13 ஆம் ஆண்டில் கேரட் 62,220 எக்டரில் பயிரிடப்பட்டு 1.15 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் உத்திரபிரதேசம், அஸ்ஸாம், கர்நாடகா, ஆந்திரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா மற்றும் தமிழ்நாடு ஆகியவை கேரட் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் 2011-12ம் ஆண்டில் கேரட் 3,252 எக்டரில் பயிரிடப்பட்டது. நீலகிரி (74.82 சதவீதம்), திண்டுக்கல் (19.25 சதவீதம்), மற்றும் கிருஷ்ணகிரி (4.92 சதவீதம்) ஆகியவை கேரட் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். மேட்டுப்பாளையம் மற்றும் ஒசூரில் இருந்து பல்வேறு பகுதிகளில் உள்ள உழவர் சந்தைகளுக்கு கேரட் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது மேட்டுப்பாளையம் காய்கறி சந்தையில் 75 கிலோ கேரட் ரூ.2250 (மஞ்சள் கேரட்) முதல் ரூ.3000 (சிவப்பு கேரட்) வரை விற்பனை செய்யப்படுகிறது. நீலகிரி (சிவப்பு கேரட்) மற்றும் பெங்களூரைச் (மஞ்சள் கேரட்) சார்ந்த விவசாயிகள் தங்களது கேரட்டை இச்சந்தையில் விற்பனை செய்கின்றனர். கேரளா,

திருப்பூர், மதுரை மற்றும் சென்னையை சார்ந்த வர்த்தகர்கள் இச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்கின்றனர். வர்த்தகர்கள் பொதுவாக நிறம், பளபளப்புதன்மை மற்றும் அளவை கொண்டு தேர்வு செய்கின்றனர். விலை பொதுவாக தரம் மற்றும் வரத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

இம்மையம் கடந்த 9 ஆண்டுகளாக மேட்டுப்பாளையம் சந்தையில் நிலவிய விலையை ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் அறுவடையின் போது அதாவது நவம்பர் மற்றும் டிசம்பர் 2014ல் கேரட் விலை கிலோவிற்கு ரூ.25 முதல் ரூ.30 வரை நிலவும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விலை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு உருளைக்கிழங்கு, பீட்ரூட் மற்றும் கேரட் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-</u>


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி: 0422-2431405


<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-</u>


பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
விஜயநகரம்,
உதகமண்டலம்-643001.
தொலைபேசி: 0423-2442170


மக்கள் தொடர்பு அலுவலர்